[2013 மே 3

வினா வரிசை எண் 389, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

389—

கால்நடைக் கிளை நிலையம்

***21538—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, சீலியம்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள சீலியம்பட்டி கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஏறக்குறைய 3 ஆயிரம் கால்நடை அலகுக்குமேல் இருக்கின்ற காரணத்தினால், அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஞாலம் கருதினும் கைகூடும், காலம்
கருதி இடத்தால் செயின்."

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, ஒருவர் தன்னை காலம் அறிந்து, ஏற்ற இடமறிந்து ஒரு செயலை செய்வாரானால் இவ்வுலகத்தை ஆளக் கருதினாலும் அது அவருக்கு கைகூடும் என்பது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. அந்த வாக்கிற்கேற்ப,

2013 மே 3]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய 2001–2005 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலேயே சீலியம்பட்டி ஊராட்சியிலேயே கால்நடை துணை மருத்துவமனை அமைக்கப்பட்டது. அதன் பின்பு வந்த தி.மு.க. ஆட்சி அதை அகற்றிவிட்டது. அதன்பின்பு தற்போது அமைத்துக் கொடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 390, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

390—

சமுதாயக் கூடம்

***11746—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆர். வேலூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், ஆர். வேலூர் கிராமத்தில் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக் கூடம் கட்டத் தேவையான இடம் இருப்பின், நிதி நிலைமைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு அம்மா